/

<u>பதிவு அஞ்சல் ஒப்புகையுடன்</u>

**<u>முதன்மை இயக்குநர் நெடுஞ்சாலைத்துறை, கிண்டி, சென்னை –25 அவர்களின் செயல்முறைகள்</u>**

**<u>பிறப்பிப்பவர் – திரு பி.ஆர்.குமார், எம்.இ.</u>**

**<u>செயல்முறை ஆணை எண். 18230 / நிர் 3 (2) / 2018</u>** **<u>நாள். 23.12.2022</u>**

பொருள் : பணியமைப்பு – நெடுஞ்சாலைத்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணையின் அடிப்படையில் – இளநிலை உதவியாளர் – பணிநியமன ஆணை– வழங்குதல்.

பார்வை :
1. முதன்மை இயக்குநர்(நெ), சென்னை, நிர்வாகம் 1(2) பிரிவின் அலுவல்முறைசாரா குறிப்பு எண். நிர்.7/16282/2018, நாள். 09.12.2022.
2. முதன்மை இயக்குநர்(நெ), சென்னை, நிர்வாகம் 1(2) பிரிவின் அலுவல்முறைசாரா குறிப்பு எண். நிர்.7/16282/2018, நாள். 14.12.2022.

*******

இத்துறையில் பணியிலிருந்தபோது மரணமடைந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய சார்நிலை அலுவலர்களிடமிருந்து பரிந்துரைகளுடன் பெறப்பட்ட பிரேரணைகளின் அடிப்படையிலும், தனியர் பெற்ற கல்வி தகுதி மற்றும் அரசுப் பணியில் சேருவதற்கு தேவைப்படும் அனைத்து சான்றிதழ்கள் மற்றும் சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்கள் அளித்த வறிய நிலை சான்றிதழ் ஆகியவற்றின் அடிப்படையிலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மறைந்த அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் பிரிவு 17(1) (தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொதுவிதி 10(ஏ)), கீழ் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் ரூ.19500–71900 (நிலை–8)ன்படி இளநிலை உதவியாளர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதிய ஏற்ற முறையில் தமிழ்நாடு அமைச்சுப்பணிகளின் கீழ் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்தில் பணியமர்த்தி ஆணை வழங்கப்படுகிறது.

**<u>நிபந்தனைகள் :-</u>**

1) மேற்காணும் நபர்கள் கருணையின் அடிப்படையில் பணிநியமனம் கோரி முன்னர் விண்ணப்பம் அளித்த நிலையில் சமர்ப்பித்த சான்றுகள் /ஆவணங்களின்படி தனியர்கள் தற்காலிகமாக நிபந்தனைகளுக்குட்பட்டு இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்படுகின்றார்கள். அதே சமயம் தனியர்கள் முன்னர் சமர்ப்பித்த ஆவணங்களில் குறிப்பாக இதர குடும்ப உறுப்பினர்கள் எவரும் அரசு/தனியார் துறையில் பணியில் இல்லை/ இதர குடும்ப உறுப்பினர்கள் தனியருக்கு பணிநியமனம் வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லை / பணி நியமனம் கோரிய அரசு ஊழியரின் மனைவி மறுமணம் செய்யவில்லை என்பதற்கான சான்றுகளை பெற்றுக்கொண்டு பணியில் சேர அனுமதிக்கலாம்.

2) தனியர்கள் 1.4.2003 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பணியில் சேர்ந்த நாள்முதல் கொண்டுவரப்படுவார்கள்.

3) இந்த பணி நியமனம் தனியர்கள் சமர்பித்துள்ள கல்வி மற்றும் இதர தகுதிகள் குறித்த சான்றுகளின் மெய்தன்மைக்கு உட்பட்டதென்றும், தனியர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் வரை தற்காலிகமாக பணிபுரிய வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

4) இந்த ஆணையின் அடிப்படையில் எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது. மேலும், தனியர்களின் சான்றிதழ்கள் உண்மை தன்மை இல்லை என கண்டறியப்பட்டால் மறு அறிவிப்பின்றி உடன் பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.

5) பணியிடமின்மை ஏற்படும் பட்சத்தில் எந்த நேரத்திலும் எவ்வித முன்னறிவிப்பின்றி தனியர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் எனவும் மேலும், தற்காலிக பணிக்குரிய அனைத்து விதிகளும் தனியர்களை கட்டுப்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

6) தனியர்கள் பணியில் சேரும் போது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரால் அளிக்கப்பட்ட உடற்கூறு தகுதிச் சான்றிதழ் ( Physical Fitness Certificate) பெற்று பணியில் சேரும் அலுவலகத்தில் அளிக்கவேண்டும். குறிப்பாக மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தமட்டில் குறைபாடு சதவிகிதம் மற்றும் அவர்களது பணித்திறன் சரிபார்க்கப்பட்டதற்கான சான்றிதழ் மாவட்ட மருத்துவக் குழுவிடமிருந்து பெற்று பணியில் சேரும்பொழுது தனியர்கள் அளிக்கவேண்டும்.

7) இவ்வாணை பெற்ற 15 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து மறுநியமன ஆணை பெற்று உடன் பணியில் சேர வேண்டும்.

8) தனியர்கள் இரண்டாம் மொழிப் பாடத் தேர்வு தமிழ் மொழியில் தேர்ச்சி பெறவில்லை எனில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நிபந்தனைகள் சட்டம் 2016 பிரிவு 21–ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு பணியில் சேர்ந்த இரண்டாண்டு காலத்திற்குள் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறவில்லை எனில், அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.

9) தனியர்கள் பணியமர்த்தப்பட்ட அலுவலகத்தில் பணியில் சேரும்போது சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவரிடம் கீழ்காணும் அசல் சான்றிதழ்களை அளிக்கவேண்டும்.

i) தகுந்த மருத்துவரிடமிருந்து பெற்ற உடற்கூறு தகுதிச் சான்றிதழ்/மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தமட்டில் மாவட்ட மருத்துவக் குழுவின் சான்றிதழ்.

ii) கல்வித் தகுதிக்கான அசல் சான்றிதழ்கள்

iii) இனச் சான்று

iv) இருப்பிடச்சான்று

v) அரசால் அங்கீகரிக்கப்பட்ட புகைப்படம் உள்ள ஆளறிச் சான்றிதழ் (Identification certificate with photo )

vi) கடவுச் சீட்டு வைத்திருந்தால், அதன் ஒளிக்கதிர் நகல்

10) ஏற்கனவே, பெற்றுள்ள கடவுச் சீட்டினை கொண்டு துறையின் உரிய அலுவலரின் முன் அனுமதி இன்றி வெளிநாடு பயணம் மேற்கொள்ளுதல் கூடாது.

11) தனியர்கள் பணியில் சேரும் நாளன்று தங்களது பெயரில் உள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் குறித்த முழுமையான விவரங்களை உரிய படிவங்களில் சமர்பித்தல் வேண்டும்.

12) வேலை வாய்ப்பு அலுவலக பதிவு அட்டை இருப்பின், பணியில் சேரும் அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும். மேலும் தொழிற் கல்வி தகுதி குறித்த (Professional Qualification) வேலைவாய்ப்பு பதிவு செய்யப்பட்டிருப்பின்,

சம்பந்தப்பட்ட பதிவு அட்டையில் நகலுடன் கீழ்கண்ட விபரங்களை பணியில் சேரும் அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.

i) உயர் கல்வித் தகுதி விபரம் (Professional Qualification)

ii) எந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

iii) பதிவு செய்த நாள்

iv) எந்த தேதிவரை பதிவு செல்லத்தக்கது

v) பதிவினை புதுப்பிக்க வேண்டிய நாள்

இணைப்பு – பிற்சேர்க்கை

பி.ஆர்.குமார்
முதன்மை இயக்குநர்
நெடுஞ்சாலை.

பெறுநர்

1. திருமதி. ஜி. ஆர். ரேணுகாதேவி
க/பெ (லேட்) திரு. ஜி. ஜி. பெருமாள்சாமி
எண். 41, கருமாயா வீதி எண் 2,
கோபிசெட்டிபாளையம் – 638 452.

2. திரு. மா. முருகன்
த/பெ (லேட்) திரு. அ. மாதப்பன்
விராலிக்காடு,
மூலக்காடு,
மேட்டூர் அணை,
சேலம் மாவட்டம் – 636 452.

3. மு. துரைராஜசோழன்
த/பெ (லேட்) திரு. ஆ. முத்தையன்
எண்.1/9A, சேங்காலிபுரம் ரோடு,
சுண்ணாம்பு பாளையம் தெரு,
குடவாசல் அஞ்சல் (ம) தாலுகா,
திருவாரூர் மாவட்டம்.

நகல் –
தலைமைப் பொறியாளர்(நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு, சென்னை–25.
தலைமைப் பொறியாளர்(நெ), நபார்டு (ம) கிராமச் சாலைகள், சென்னை–25.
தலைமைப் பொறியாளர்(நெ), திட்டங்கள், சென்னை–25.
கண்காணிப்பு பொறியாளர்(நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு, திருச்சி.
கண்காணிப்பு பொறியாளர்(நெ), நபார்டு (ம) கிராமச் சாலைகள், சேலம்.
கண்காணிப்பு பொறியாளர்(நெ), திட்டங்கள், கோவை.
கோட்டப் பொறியாளர்(நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு, திருவாரூர்.
கோட்டப் பொறியாளர்(நெ), நபார்டு (ம) கிராமச் சாலைகள், சேலம்.
கோட்டப் பொறியாளர்(நெ), திட்டங்கள், சேலம்.
நிர்வாகம் '7' பிரிவு

//உண்மைநகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது //

23/12/2022
கண்காணிப்பாளர்.

23/12/2022

முதன்மை இயக்குநர் (நெ), சென்னை–25 அவர்களின் செயல்முறை ஆணை
எண். 18230 / நிர்.3 (2) / 2018 நாள். 23.12.2022–இன்பிற்சேர்க்கை

| வரிசை எண். | வாரிசுதாரர் பெயர்/ பிறந்த தேதி மற்றும் முகவரி (திருவாளர்கள்) | கல்வித் தகுதி | பணியமர்த்தப்படும் அலுவலகம் |
|---|---|---|---|
| 1 | ஜி. ஆர். ரேணுகாதேவி<br>க/பெ (லேட்) திரு. ஜி. ஜி. பெருமாள்சாமி<br>08.07.1965<br>எண். 41, கருமாயா வீதி எண் 2,<br>கோபிசெட்டிபாளையம் – 638 452. | பத்தாம் வகுப்பு தேர்ச்சி | உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ) அலுவலகம், திட்டங்கள், ஈரோடு |
| 2 | மா. முருகன்<br>த/பெ (லேட்) திரு. அ. மாதப்பன்<br>10.02.1978<br>விராலிக்காடு,<br>மூலக்காடு,<br>மேட்டூர் அணை,<br>சேலம் மாவட்டம் – 636 452. | பத்தாம் வகுப்பு தேர்ச்சி | கோட்டப் பொறியாளர் (நெ) அலுவலகம், நபார்டு (ம) கிராமச் சாலைகள், சேலம் |
| 3 | மு. துரைராஜசோழன்<br>த/பெ (லேட்) திரு. ஆ. முத்தையன்<br>03.04.1980<br>எண்.1/9A, சேங்காலிபுரம் ரோடு,<br>சுண்ணாம்பு பாளையம் தெரு,<br>குடவாசல் அஞ்சல் (ம) தாலுகா,<br>திருவாரூர் மாவட்டம். | பத்தாம் வகுப்பு தேர்ச்சி | கோட்டப் பொறியாளர் (நெ) அலுவலகம், கட்டுமானம் (ம) பராமரிப்பு, திருவாரூர் |

பி.ஆர்.குமார்,
முதன்மை இயக்குநர்,
நெடுஞ்சாலை.

//உண்மைநகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது //

23/12/2022
கண்காணிப்பாளர்

23/12/2022